# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## பொதுத்தமிழ்


நேரம்: 3.00 மணி                மதிப்பெண்கள்: 90

Common Exam

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும்விடை தருக:**        14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலகாரிகை        ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம்        ஈ) நன்னூல்
2. பொருத்துக:
   அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
   ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
   இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
   ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன
   அ) 1,3,4,2        ஆ) 3,1,4,2        இ) 3,2,1,4        ஈ) 3,1,2,4
3. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



   அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
   திண்ணியர் ஆகப் பெறின்.
   ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
   அச்சாணி அன்னார் உடைத்து.
   இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
   மற்றைய எல்லாம் பிற.
   ஈ) சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
   வறுமை தருவதுஒன்று இல்.
4. சுவையோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க:
   அ) வசம்பு        ஆ) மணத்தக்காளியிலைச் சாறு        இ) கடுக்காய்        ஈ) மாவிலைக்கரி
5. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
   காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.
   அ) கூற்று சரி, காரணம் தவறு        ஆ) கூற்று தவறு, காரணம் சரி
   இ) கூற்று தவறு, காரணம் சரி        ஈ) கூற்று சரி, காரணம் சரி
6. வேறுபட்டதைக் குறிப்பிடுக:
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு        ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ)        காட்சி மறைவு
7. ரூபாவதி என்னும் நூலின் ஆசிரியர்
   அ) பரிதிமாற் கலைஞர்        ஆ) மு.வரதராசனார்        இ) ஜி.யு.போப்        ஈ) ஐராவதம் மகாதேவன்
8. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்
   அ) நன்னூல்        ஆ) அகத்தியம்        இ) தொல்காப்பியம்        ஈ) இலக்கண விளக்கம்
9. பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக:
   அ) அறம் - 1) கர்ணன்
   ஆ) வலிமை - 2) மனுநீதிச் சோழன்
   இ) நீதி - 3) பீமன்
   ஈ) வள்ளல் - 4) தருமன்
   அ) 3 2 1 4        ஆ) 4 3 2 1        இ) 2 4 3 1        ஈ) 4 3 1 2

Common Exam

10. Cenematography - என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் அறிக.
அ) ஒளிப்பதிவு ஆ) ஒலி விளைவு இ) திரை இசை ஈ) திரையின் காட்சி

11. 'தலைக்கோல்' - இச்சொல்லில் புணர்ந்து வரும் புணர்ச்சி விதி
அ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
ஆ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
இ) ஈறுபோதல் ஈ) இ ஈ ஐ வழி யவ்வும்

12. அறிவும் புகழும் - இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) எண்ணும்மை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

13. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

14. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறர்க்குப் பயன்படாது
ஆ) தனக்கும் பயன்படாது, பிறர்க்கும் பயன்படாது
இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளி:** 3 x 2 = 6

15. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யாருக்கு?
16. "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்ளார் தலமோங்கு கந்தவேளே" - தொடருக்குப் பதவுரை எழுதுக.
17. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நிதி கூறுகிறார்?
18. அகநானூறு எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2 x 2 = 4

19. "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. நாராசம், தூக்கு என்பது யாது?
21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** 7 x 2 = 14

22. சொல்லினைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க: வெங்காயம்
23. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:
அ) அண்ணைக்கு அவனுக்கு பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான்.
ஆ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
25. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் அமைக்க: வானம், பற, நிலவு, தொடு
26. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
27. ஏதேனும் ஒன்றினுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : அ) கலங்கி ஆ) பேசுவார்
28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:
என்னுடைய நம்பிக்கை முழுவ்துமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

29. தொடரை மாற்றி எழுதுக:

அ) இமயமலை மிகவும் உயரமானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக)

ஆ) நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. (கலவைத் தொடராக மாற்றுக)

30. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2 x 4 = 8

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.

33. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விவரிக்க.

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2 x 4 = 8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

37. சென்னையின் நீர் நிலைகள் குறித்து எழுதுக.

38. மயிலை சீனி.வேங்கடசாமியின் படைப்புகள் குறித்து எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3 x 4 = 12

**குறிப்பு : காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண்.41 க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.**

39. சொற்பொருள் பின்வருநிலையணி அல்லது நிரல்நிரை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கியநயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் எவையேனும் மூன்று நயங்கள் மட்டும் எழுதுக)

அந்நியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ? - *பாரதிதாசன்*

41. தமிழாக்கம் தருக:

அ) A new language is a new life.

ஆ) Learning is a treasure that will follow its owner everywhere.

இ) If you want people to understand you, speak their language.

ஈ) Green Belt Movement.

41. **காதுகேளாதோருக்கான மாற்றுவினா:**

பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே

பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே."

வினாக்கள்:

1) மொழி என்பது யாது? 2) தாயின் மகிழ்ச்சி எவற்றில் உள்ளது?

3) மொழியால் வளர்பவர் யார்? 4) குழந்தையின் மன வளர்ச்சியோடு தொடர்புடையது எது?

42. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கவிதை புனைக: இயற்கை அல்லது தாயன்பு

43. கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக:

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

நாள் : அக்டோபர் 2 நேரம் : காலை 10 மணி

இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை.

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : திருமதி அரசி
செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

முன்னிலை : திரு.அமுதன் - இயற்கை வேளாண் உழவர்

தலைமையுரை: திரு. இமயவரம்பன்
பேரிடர் மேலாண்மை இயக்குநர்

கருத்தரங்க தலைப்புகள்

★ இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்
★ பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் - திரு.முகிலன்
★ நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி.பாத்திமா
★ பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும், செய்யக்கூடாததும் - திரு.வின்சென்ட்

நன்றியுரை : ஜமீலா, பசுமைப்படை மாணவர் தலைவர்

நாட்டுப்பண்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 3 x 6 = 18

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

*(அல்லது)*

ஆ) நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. எவ்வாறு? விளக்குக.

*(அல்லது)*

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

46. அ) 'சாலை விபத்தில்லாத தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

*(அல்லது)*

ஆ) கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** 4 + 2 = 6

47. அ) "துன்புஉளது ..." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

ஆ) சுடும் - என முடியும் குறட்பா.

******